# இலங்கை, சமாதானம், மனித உரிமைகள் மற்றும் புலம்பெயர்ந்து வாழ்வோர் பற்றிய ஒரு பொதுக்கூட்டம்

சர்வதேச மன்னிப்புச் சபை (Amnesty International)
மற்றும்
மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு (Human Rights Watch)

இப்பொதுக்கூட்டத்திற்கு உங்களை அழைக்கின்றன

பேராசிரியர் பிலிப் அல்ஸ்டன் (Professor Philip Alston)
நீதிக்குப்புறம்பான அல்லது விசாரணைகளற்ற அல்லது எழுந்தமானமான கொலைகள் பற்றிய
ஐ. நா. சபை விசேட விசாரணையாளர்

மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு
பேச்சாளர்களும் பங்குபற்றுவர்.

ஆகஸ்ட் 5, 2006 மாலை 2 - 5 மணி வரை

சர்வதேச மன்னிப்புச் சபை மனித உரிமைகள் செயற்பாட்டு நிலையம்

Amnesty International Human Rights Action Centre
17 – 25 New Inn Yard
London EC2A 3EA

பேராசிரியர் பிலிப் அல்ஸ்டன், சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புகளைச் சேர்ந்த பேச்சாளர்களின் பேச்சுக்கள் முடிவடைந்த பின்னர் இலங்கையில் மனிதஉரிமைகளின் நிலமையைப் பற்றியும் ஜனநாயகம், மனித உரிமைகள் என்பவற்றை உறுதிப்படுத்தக் கூடிய சமாதானத்தை இலங்கையில் ஏற்படுத்துவதற்கு புலம்பெயர் சமூகம் ஆற்றக்கூடிய ஆக்கபூர்வமான பங்களிப்பைப் பற்றியும் வெளிப்படையான, திறந்த கலந்துரையாடலொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

அருகிலுள்ள டியூப் (tube): ஓல்ட் ஸ்ரீட், லிவர்பூல் ஸ்ரீட் (Old Street, Liverpool Street)
பாதை மற்றும் வாகனத் தரிப்பிட விபரங்களை இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் பார்க்கவும்.



பிலிப் அல்ஸ்டன், நீதிக்குப்புறம்பான அல்லது விசாரணைகளற்ற அல்லது எழுந்தமானமான கொலைகள் தொடர்பான ஐ. நா. சபை விசேட விசாரணையாளர், அவர்கள் இலங்கையில் சீர்கெட்டுவரும் மனித உரிமைகளின் நிலமையைப் பற்றியும் சமாதானப் பேச்சுவார்த்தையில் அதனது தாக்கத்தைப் பற்றியும் டிசம்பர் 2005ல் இலங்கைக்கு விஜயம் செய்தபின்னர் மார்ச் 27, 2005ல் முக்கியமானதொரு அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அறிக்கையின் சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்புகள் கூட்டத்தின்போது பேராசிரியர் பிலிப் அல்ஸ்டன் அவர்களால் வெளியிடப்படும்.

"எனது அறிக்கையின் பிரதான எண்ணக்கரு சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், உரிய நடவடிக்கையெடுக்கப்படாது விடப்படுமாயின், சமாதான நடவடிக்கைகளைப் பாரதூரமாகப் பாதிப்பதுடன் அதன் காரணமாக இலங்கை பழையபடி ஒரு முழு அளவிலான யுத்தத்தின் இருண்டகாலத்திற்குள் தள்ளப்படும் என்பதுவேயாகும். அண்மைக்காலத்து நிகழ்வுகள் இம்முடிவை வருந்தத்தக்கவிதத்தில் உறுதிப்படுத்தியுள்ளது".

- பிலிப் அல்ஸ்டன், பத்திரிகை அறிக்கை, டிசம்பர் 2005.

பேராசிரியர் அல்ஸ்டன் தனது அறிக்கையில் இலங்கையில், குறிப்பாக தமிழ், முஸ்லிம் சமூகத்தில், தற்போது நிலவும் பயச் சூழல், பழிவாங்குதவற்காக மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள், தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளல் என்பவற்றைப் பற்றி பல முக்கியமான அவதானிப்புகளை முன்வைக்கிறார். அவர் தனது அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கிறார்,

*அரசியற் படுகொலைகள் சமூகத்தின்மீது செலுத்தும் தாக்கமானது ஒப்பீட்டளவில் தற்செயலான யுத்தநிறுத்த மீறல்களினால் ஏற்படும் மரணங்களினால் அல்லது பொதுவான குற்றச் செயல்களால் ஏற்படும் பாதிப்பைவிட மிகவும் அதிகமாகும். சமூகங்களை ஒடுக்கி, பிளவுகளை ஏற்படுத்தி அதனூடாக அரசியல் ஆதாயம் தேடுவதே இக்கொலைகளின் நோக்கம்.*

பேராசிரியர் பிலிப் அல்ஸ்டன் அவர்களின் பரிந்துரைகளிற் சில கீழ்வருமாறு,

*அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் 2003ம் ஆண்டில் நடந்த பேச்சுவார்த்தையின்போது தாம் ஏற்றுக்கொண்டதுபோல் மனித உரிமைகள் தொடர்பான உடன்பாடொன்றை எட்டுவதன்மூலம் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை வலுப்படுத்தவேண்டும். வன்முறைகளையும் மனித உரிமை மீறல்களையும் ஆவணப்படுத்தவும், விசாரணை செய்யவும், உரிய நிர்வாக அலகுகளிடம் முறையிடவும் கூடிய அதிகாரத்துடன், சமூகத்தின் பல மட்டங்களிலும் வேலை செய்யும் ஏனைய மனித உரிமை நிறுவனங்களுடன் இணைந்து செயற்படக்கூடியதான, ஒரு செயலூக்கமுள்ள சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும்.*

*இப்புலம்பெயர் சமூகங்கள் தமக்கிருக்கும் குறிப்பிடத்தக்களவு அரசியல், பொருளாதார செல்வாக்கையும் நிதிவழங்கும் இயலுமையையும் பயன்படுத்தி மனித உரிமைகளை மேம்படுத்தவும், மதிக்கும்படியும் நிர்ப்பந்திப்பது அவர்களது பொறுப்பும் கடமையுமாகும்.*

அறிக்கையின் பிரதான பரிந்துரைகளில் ஒன்றான இலங்கையில் மனித உரிமைகள் மதிக்கப்படுவதற்கும் மேம்படுத்தப்படுவதற்கும் புலம்பெயர் மக்கள் ஆக்கபூர்வமான பங்கை ஆற்றவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்ற முதலாவது படியாக இவ்வெளியீடும் கலந்துரையாடலும் அமைகிறது.

இலங்கையில் மனித உரிமைகளுடன் கூடிய சமாதானத்தை விரும்பும் சகலரையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டு இரண்டு தசாப்த காலமாக யுத்தத்தன்பிடியில் அகப்பட்டு படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும் என்று அவாவுறும் மக்களுடன் தமது ஒத்துழைப்பைக் வெளிப்படுத்தும்படி அழைக்கிறோம்.

பங்குபற்ற விரும்புபவர்கள் உங்களது பெயர் விபரத்தை தயவுசெய்து தபால்மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ அறியத்தரவும்.
மின்னஞ்சல் முகவரி: SriLanka@amnesty.org (பங்குபற்றுவதை உறுதிப்படுத்த மாத்திரமே, கேள்விக்கு அல்ல)
தபால்: SriLanka Team, Amnesty International, Peter Benenson House, 1 Easton Street, London WC1X ODW.

- காணாமற்போதல் பற்றிய கேள்வியும் விசாரணைகளற்ற கொலைகளும் உள்ளடங்கலாக குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள், ஐ. நா. சபை விசேட விசாரணையாளர் பிலிப் அல்ஸ்டனின் அறிக்கை. பார்க்க : http://www.ohchr.org/english/bodies/chr/docs/62chr/E_CN4_2006_53_Add5.doc